**பாடம் - 1** | **الدرس الأول**

## ஆடை அணிவதன் சட்டங்கள்

## أحكام اللباس

இஸ்லாம் அழகையும் சுத்தத்தையும் விரும்பும் மார்க்கமாகும். ஒரு முஸ்லிம் அழகிய தோற்றத்துடன் திகழ்வதற்கு இஸ்லாம் அனுமதித்திருக்கிறது. அதுமட்டு மல்ல அதற்கு ஆர்வமும் ஊட்டுகிறது. மனிதனின் மானத்தை மறைக்கவும் அவனை அலங்கரிக்கவும் உதவக்கூடிய ஆடைகளை அல்லாஹ் படைத்திருக்கிறான்.

﴿يَا بَنِي آدَمَ قَدْ أَنْزَلْنَا عَلَيْكُمْ لِبَاسًا يُوَارِي سَوْآتِكُمْ وَرِيشًا وَلِبَاسُ التَّقْوَى ذَلِكَ خَيْرٌ ذَلِكَ مِنْ آيَاتِ اللهِ لَعَلَّهُمْ يَذَّكَّرُونَ﴾ [الأعراف:٢٦]

‘ஆதமுடை மக்களே! உங்கள் வெட்கத்தலங்களை மறைக்கும் ஆடையையும், அலங்காரத்தையும் உங்களுக்கு அருளியுள்ளோம். (ஆயினும்) இறையச்சம் எனும் ஆடையே சிறந்தது. இது அல்லாஹ்வின் சான்றுகளில் உள்ளதாகும். இதன் மூலம் அவர்கள் நற்சிந்தனை பெறக்கூடும்.’ (7:26)

ஆடைகளைப் பொறுத்தவரை சட்டத்தின் அசல் நிலை ஆகுமென்பதே! ஆனால் அணியக்கூடாதென தடுக்கப்பட்டுள்ளதை அணிவது கூடாது. குறிப்பிட்ட ஆடையைத்தான் அணிய வேண்டும் என்று இஸ்லாம் நிர்ணயம் செய்யவில்லை.

ஆயினும் ஆடை அணிவதில் ஒரு முஸ்லிம் அவசியம் கடைபிடிக்க வேண்டிய சில சட்டங்களை இஸ்லாம் வகுத்துத் தந்துள்ளது. அவை வருமாறு:

1. அவன் அணியும் ஆடை மறைக்கப்பட வேண்டிய உறுப்புக்களை மறைக்கும் விதமாக அமைந்திருக்கவேண்டும்,அவற்றைவெளிப்படுத்தும் விதமாக அமைந்திருக்கக்கூடாது.
2. முஸ்லிம் அல்லாதோருக்கு ஒப்பாகும் வகையில் அல்லது சில தீமையான காரியங்களைச் செய்யக்கூடியவர்கள் என அறியப்படுவோருக்கு (உரிய பிரத்தி யேகமான ஆடைக்கு) ஒப்பாகும் வகையில் அந்த ஆடை அமைந்திருக்கக்கூடாது.
3. ஆடை விஷயத்தில் வீண் விரயம் செய்யக்கூடாது.

இதுபோன்ற நிபந்தனைகளை கவனத்தில் கொண்ட பிறகு ஒருவன் தனது தேவை மற்றும் சமூக வழக்கத்திற்குப் பொருத்தமான ஆடையை அணிந்து கொள்ள வேண்டும்.

### ஆடை விஷயத்தில் தடுக்கப்பட்ட சில விஷயங்கள் வருமாறு:

1. ஆண்களைப் பொருத்தவரை தங்கம் மற்றும் பட்டு அணிவது கூடாது. ஆனால் பெண்களுக்கு இவ்விரண்டும் ஆகுமானதே.

عن عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ ﷺ يَقُولُ إِنَّ نَبِيَّ اللهِ ﷺ أَخَذَ حَرِيرًا فَجَعَلَهُ فِي يَمِينِهِ وَأَخَذَ ذَهَبًا فَجَعَلَهُ فِي شِمَالِهِ ثُمَّ قَالَ إِنَّ هَذَيْنِ حَرَامٌ عَلَى ذُكُورِ أُمَّتِي (نس٥٠٥٣، د٤٠٥٧، جه٣٥٩٥)

ஏனெனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பட்டை எடுத்து தமது வலது கையில் வைத்துக் கொண்டு தங்கத்தை தமது இடது வைத்துக் கொண்டு ‘இவ்விரண்டும் என் சமுதாயத்திலுள்ள ஆண்களுக்கு விலக்கப்பட்டதாகும்’ எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அலீ(ரலி), நூல்: நஸயீ(5053), அபூதாவூத் (4057), இப்னுமாஜா(3595)

ஆனாலும் ஆண்கள் வெள்ளி மோதிரம் அணிவதில் எந்தக் குற்றமும் இல்லை. அல்லது சிறிதளவு வெள்ளி கலந்திருக்கின்ற ஏதேனும் ஒன்றை அணிந்து கொள்வது பற்றியோ

எந்தக் குற்றமுமில்லை. ஆனாலும் அது வழக்கமாக ஆண்கள் அணிந்து கொள்ளும் பொருளாக இருக்க வேண்டும்.

2. உயிருள்ளவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்ட ஆடையை அணிவது கூடாது. அந்த வகையில் ஒரு மனிதனின் அல்லது ஒரு உயிரினத்தின் உருவம் பொறிக்கப்பட்ட ஆடையை ஒரு முஸ்லிம் அணிவது கூடாது. அந்த உருவம் உடையிலோ ஆபரணத்திலோ அல்லது அவன் அணிந்து கொள்கின்ற வேறு எதில் இருந்தாலும் சரியே.

عَنْ عَائِشَةَ أُمِّ الْمُؤْمِنِينَ ﷺ أَنَّهَا أَخْبَرَتْهُ أَنَّهَا اشْتَرَتْ نُمْرُقَةً فِيهَا تَصَاوِيرُ فَلَمَّا رَآهَا رَسُولُ اللهِ ﷺ قَامَ عَلَى الْبَابِ فَلَمْ يَدْخُلْهُ فَعَرَفْتُ فِي وَجْهِهِ الْكَرَاهِيَةَ فَقُلْتُ يَا رَسُولَ اللهِ أَتُوبُ إِلَى اللهِ وَإِلَى رَسُولِهِ ﷺ مَاذَا أَذْنَبْتُ فَقَالَ رَسُولُ اللهِ ﷺ مَا بَالُ هَذِهِ النُّمْرُقَةِ قُلْتُ اشْتَرَيْتُهَا لَكَ لِتَقْعُدَ عَلَيْهَا وَتَوَسَّدَهَا فَقَالَ رَسُولُ اللهِ ﷺ إِنَّ أَصْحَابَ هَذِهِ الصُّوَرِ يَوْمَ الْقِيَامَةِ يُعَذَّبُونَ فَيُقَالُ لَهُمْ أَحْيُوا مَا خَلَقْتُمْ وَقَالَ إِنَّ الْبَيْتَ الَّذِي فِيهِ الصُّوَرُ لَا تَدْخُلُهُ الْمَلَائِكَةُ (خ٢١٠٥، م٢١٠٧)

ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள்: உருவங்கள் உள்ள தலையணை ஒன்றை நான் வாங்கினேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதைப் பார்த்தபோது வீட்டிற்குள் நுழையாமல் வாசலிலேயே நின்று விட்டார்கள். அவர்களின் முகம் வெறுப்பு அடைந்ததை நான் அறிந்து கொண்டேன். 'அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்விடமும் அவன் தூதரிடமும் பாவமன்னிப்புத் தேடிக்கொள்கிறேன்ளூ நான் செய்த தவறு என்ன?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'இது என்ன தலை யணை?' என்று கேட்டார்கள். 'தாங்கள் இதில் அமர்வதற்காகவும், சாய்ந்து கொள்வதற்காகவும் உங்களுக்காக இதை வாங்கினேன்' என்று கூறினேன். உடனே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், 'இந்த உருவங்களை வரைந்தவர்கள் மறுமை நாளில் வேதனை செய்யப்படுவார்கள். ஷநீங்கள் படைத்தவற்றுக்கு உயிர் கொடுங்கள் என்று அவர்களிடம் கூறப்படும்' என்று கூறினார்கள். பிறகு உருவப் படங்கள் உள்ள வீட்டில் வானவர்கள் நுழையமாட்டார்கள்' என்றும் கூறினார்கள். நூல்: புகாரி(2105), முஸ்லிம்(2107)